# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.207 /2023

## CNR.No.TNCB19000

Date:10.03.2026 PW1

| பெயர் | பி,கே.நடராஜன் | வயது | 70 |
|---|---|---|---|
| த/பெ | காளியண்ணன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பெத்திக்குட்டை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 10th March 2026

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4-வது பக்கத்தில் உள்ள 23 -வது பொருளான சிலிண்டர் யார் பெயரில் உள்ளது என்றால் தெரியவில்லை அது நன்கொடையாக வந்தது. அந்த சிலிண்டர் எந்த கம்பெனியை சேர்ந்தது என்றால் H.P. பொதுவாக ஒருவர் நன்கொடையாக கொடுத்தால் யார் கொடுத்தார்கள் என்பது குறித்த விபரம் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் அது நன்கொடையாக வரவில்லை என்றும் அவ்வாறு வந்திருந்தால் அவருடைய பெயர் மற்றும் விபரத்தை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா. ஆ. 4 ஆவணம் தனிநபரால் ஆக்கிரமிப்புபட்டுள்ள கோயில் மற்றும் அதன் சொத்துக்களை மீட்பது சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். முருகேசன் என்ற பெயர் தனிநபர் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். முருகேசன் பொருளாளர் என்று வா. சா. ஆ 4 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முருகேசன் பொது மக்களிடம் பணம் வாங்கி ஏமாற்றி விட்டதாக சொல்லியுள்ள நிலையில் எந்தெந்த நபரிடம் எவ்வளவு வாங்கினார் என்பது குறித்து சொல்லவில்லை என்றால் ரசீது புக்

அவரிடம்தான் உள்ளது. யார் யாரிடம் எவ்வளவு ப ணம் வசூல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

முருகேசன் கோயில் சொத்துக்களை அபகரித்தது சம்பந்தமாக எந்த தேதியில் கூட்டம் கூட்டப்பட்டது பற்றி முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. யார் யார் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள் என்ன தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் சொன்ன தேதியில் எந்த கூட்டமும் நடக்கவில்லை என்றும் அதனால்தான் ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.